**இழப்பீடுகளுக்கான அலுவலகம்  - 2019**

---

## 1.1 பாதகமான அபிப்பிராயம்

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உண்மையானதும் நியாயமானதுமான நிலமைகளை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த நிலையான கடம்டளையின் அடிப்படையில் நடைமுறைக் கணக்கில் உள்ள மிகையான பணம் தன்னியக்கமான முறையில் சேமிப்புக் கணக்கினூடாக மாற்றம் செய்வதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் சேமிப்புக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்த சேமிப்புக் கணக்கின் மீதியானது கடந்த வருடத்தின் இறுதி வரையிலும் நிதிக்கூற்றுக்களில் தனியாக காண்பிக்கப்படாது காசுப் புத்தகத்தின் மீதிக்கு சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்த வழுவினை மீளாய்வாண்டின் போது திருத்தி சேமிப்புக் | இந்த கூட்டுப் பெறுமதி தொடர்பிலான விரிவான அறிக்கையொன்றினை எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். தவறு ஏற்பட்ட காலப்பகுதிக்காக ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகளை மீள 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பேரேட்டுக் கணக்குகளுக்கிடையில் சீராக்கம் மேற்கொள்ளும் போது மூல ஆவணங்களை பயன்படுத்த வேண்டிய போதிலும், இந்த பெறுமதியை சான்றுபடுத்துவதற்கு விரிவான பதிவொன்றினை பேண் வேண்டும். நிதிக்கூற்றுகளை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கணக்குப் புத்தகங்களில் காண்பிப்பதற்காக, காசுப் புத்தகத்தில் வரவு மற்றும் செலவு மீதிகளாக முறையே ரூபா 2,443,419,842 தொகை மற்றும் ரூபா 2,682,743,454 ஆன பெறுமதி பதிவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும், அந்த வரவு மற்றும் செலவுப் பதிவுகளின் உரிய பெறுமதிகளை சர்னறுபடுத்துவதற்கான எதுவும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிராததுடன், சேமிப்புக் கணக்கின் மீளாய்வாண்டிற்குரிய ஆரம்ப மீதியாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 239,021,499 ஆன பெறுமதி இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் முன்னோக்கி சீராக்கம் செய்யப்பட்டு கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் மீள சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் முன்மொழிவு திட்டத்தின் கீழ் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற வேண்டிய ரூபா 1,000,000 ஆன முதலீடுகள் பெற வேண்டிய மீதியொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அந்த முதலீட்டுப் பெறுமதியால் நிதிக்கூற்றுக்களில் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த ஒரு மில்லியன் தொகை அப்போது இடையிலுள்ள காசாக கிடைத்துள்ளது. | ஒரு மில்லியன் தொகையானது பெற வேண்டிய மீதிடியொன்றாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்த ரூபா 14,697,545 ஆன நட்டஈட்டுத் தொகை பொது வைப்புக் | எதிர்காலத்தில் இந்த பெறுமதிகள் தொடர்பிலான கணக்குகள் மூலம் வெளிப்படுத்துவதற்கு | சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்கள் சரியாக காண்பிக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கில் கழித்துக் காண்பிக்கப்பட்டமையால், மீளாய்வாண்டின் மிகையானது மேற்குறித்த பெறுமதியால் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, மீளாய்வாண்டிற்குரிய நட்டஈடு பெறுநர்களுக்கு செலுத்த வேண்டிய நட்டஈட்டு தொகையான ரூபா 15,927,540 நடைமுறைப் பொறுப்பொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கின்றேன். | வகையில் சரியான கணக்கு வைத்தல் முறை பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த ரூபா 200,000 தொகையான வணிக கடன் முன்மொழிவுகளின் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் 2015 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாது காணப்படுத் ரூபா 4,375,312 ஆன முழுமையான கடன் தொகைக்கான அறவிடமுடியாக் கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் கடன் மீதியானது பூச்சியப் பெறுமதியாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பொது திறைசேரியின் செயலாளருக்கு அனுப்பி வைத்து இந்த கடன் தொகையை பதிவழிப்பதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கபட்டுள்ளன. | இந்த கடன் மீதியை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனின், அதற்காக பொது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன், கடன் அறவிடப்படாமைக்கான காரணங்கள் கட்டுப்பாட்டு சபைக்கு அறிவிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| | விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 6,191,755 | சொத்துக்கள் பட்டோலை | 04 சொத்துத் தொகுதிகளுக்குரிய தயாரிக்கப்பட்டவாறு உள்ளதுடன், மிகவும் விரைவாக தகவல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | குறித்த பெறுமதிகளுக்கு சரியான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | முதலீடுகள் | 873,410,713 | கடன் பெற்றுக்கொள்ளப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை, விடுவிக்கப்பட்டுள்ள கடன் தொகை மற்றும் அறவிடல் தொடர்பான விபரங்கள். | உரிய வங்கி சான்றுபடுத்தல்களை உடனடியாக வழங்குவதற்க நடவடிக்கை எடுத்தல். | வங்கி சான்றுபடுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| விடயம் | நிதிக்கூற்றுகளின் பிரகாரம் பெறுமதி ரூபா | தொடர்புடைய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| நடைமுறைப் பொறுப்புகள் | 738,844,380 | 871,603,586 | 133,059,206 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்த பெறுமதியை ஒரே பெறுமதியாக பதிவு செய்வதற்கு உரிய ஆவணங்கள் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | இணக்கம் செய்யப்பட்ட சரியான பெறுமதிகள் கணக்கு வைக்கப்பட வேண்டியமை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 679,698 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா 13,133,159 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 12,453,461 ஆன வீழ்ச்சியொன்று காணப்பட்டது. மீண்டெழும் மானியங்கள் ரூபா 557,512,000 ஆல் குறைவடைந்தமை மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 9,919,886 இனால் அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது வடமாகாண புனர்வாழ்வு அதிகார சபையிடமிருந்து கிடைத்த முதலீட்டுப் பெறுமதியான ரூபா 26,650,000 தொகை மற்றும் அதற்குரிய வட்டி ரூபா 7,830,740 மற்றும் மீளாய்வாண்டில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து கிடைத்த ரூபா 11,000,000 தொகை பொது திறைசேரிக்கு மீள அனுப்பவோ அல்லது முறையான அங்கீகாரமொன்றின் பேரில் வேறு கடன் திட்டமொன்றின் கீழ் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திடமிருந்து மேலதிக ஆலோசணைகளை கோரப்பட்ட போதும் பதில் கிடைக்கவில்லை. | இப்பணத்தை முறையான அங்கீகாரமொன்றின் கீழ் கடன் திட்டமொன்றின் கீழ் முதலீடு செய்வதற்கு அல்லது திறைசேரிக்கு மீள அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இழப்பீடுகளை கொடுப்பனவுகளை செயற்திறனாகவும் முறையாகவும் நிறைவேற்றும் நோக்கில் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 3,360,000 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டு கணனி முறையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. கணனி முறைமையின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டு வரை முகாமைத்துவம் தவறியிருந்தது. | திறைசேரியினால் தொடர்ந்தும் மூலதன நிதி வழங்காமை காரணமாக இதுவரை கணனி வலையமைப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது. | வலையமைப்பு செயற்பாட்டினை விரைவில் மேற்கொண்டு முறைமையை ஸ்தாபித்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இதன் காரணமாக அதிக செலவினமொன்று செலவிடப்பட்டு கணனி முறைமையொன்றை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டில் 122 நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 7,326,301 தொகையான 122 காசோலைகளுக்கு 2020 யூன் 30 ஆந் திகதி வரை கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாக இழப்பீடுகள் உரிய நலனாலிகளுக்கு கிடைத்திருக்கிவல்லை. | உரிய நலனாலிகளால் தமது வங்கிக் கணக்கினை மூடி விடுதல், கணக்குகள் கூடியளவு காலமாக செயலற்று காணப்படல் மற்றும் வங்கியால் காசோலைகளை தடுத்து வைத்தல் போன்ற காரணங்களால் நலனாலிகளின் காசோலை தேறாமல் காணப்படுகின்றன. | நலனாலிகளுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு காசோலைகள் சரியாகவும் துரிதமாகவும் கிடைப்பதற்கு தேவையான நடை முறைகளை தயாரிக்கப்பட வேண்டியதுடன் இழப்பீடுகள் உரிய நபர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 1987 இன் 29 ஆம் இலக்க நபர்கள் ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களை மீள் நிர்மாணம் செய்யும் புனரமைக்கும் அதிகாரசபை சட்டத்தினை அகற்றி 2018 ஒக்தோபர் மாதம் 26 ஆந் திகதிய 34 ஆம் இலக்க நட்ட மீளளிப்புக்கான அலுவலக சட்டத்தின் மூலம் இழப்பீடுகளுக்கான அலுவலகம் தாபிக்கப்பட்டிருந்தது. இந்தச் சட்டத்தின் 26 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அகற்றல்கள், சேமிப்புக்கள் மற்றும் இடைக்கால ஏற்பாடுகளின் பிரகாரம் நபர்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களை புனரமைத்தல் அதிகாரசபைக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இழப்பீட்டிற்கான அலுவலகத்திற்கு கையளிக்கும் கூற்றொன்று 2020 யூலை 03 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கையளிக்கும் கூற்றொன்று எதிர்காலத்தில் தலைவர் மற்றும் அமைச்சின் செயலாளரின் கையொப்பம் பெறப்பட்டு உடனடியாக சமர்ப்பிக்கின்றேன். | புதிய நிறுவனத்திற்கு சொத்துக்கள் கையளிப்பு கூற்றொன்று தயாரிக்கப்பட்டு அது தொடர்பாக பொது திறைசேரிக்கு அமைச்சிற்கும் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள அறவிடப்பட வேண்டிய ரூபா 5,485,759 ஆன வைப்புக்களின் பெறுமதியொன்று 7 மாதங்களுக்கும் 6 ஆண்டுகளுக்கு இடையேயான காலம் கடந்திருந்த போதும் மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்கடனை அறவிடுவது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசணை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடனை அறவிடுவதற்காக துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 3 உத்தேச இழப்பீட்டு திட்டங்களின் 11,514 நலனாளிகளுக்கு ரூபா 972,000,000 தொகை இழப்பீடாக செலுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 3,522 நலனாளிகளுக்காக ரூபா 200,057,711 ஆன இழப்பீடு மாத்திரம் செலுத்தப் பட்டிருந்தமையால் இழப்பீட்டு கொடுப்பனவின் செயன் முன்னேற்றம் 25 சதவீதமாகும். | மீளாய்வாண்டிற்குரிய நலனாளிகளின் எண்ணிக்கை 11,514 ஆக இருந்ததுடன் அதற்காக ரூபா 972 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அலுவலகத்தினால் செயற்படுத்தப்படும் முன்மொழிவிற்கு மேலதிகமாக விசேட சம்பவங்கள் காரணமாக பாதிப்பிற்குள்ளான நபர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. | செலுத்த வேண்டிய இழப்பீடுகள் தொடர்பாக சரியான மற்றும் நடைமுறைச் சாத்தியமான திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 3 உத்தேச கடன் திட்டங்களின் 2,900 நலனாளிகளுக்கு ரூபா 595,000,000 மில்லியன் கடனாக செலுத்துவதற்காக அதிகாரசபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 550 நலனாளிகளுக்காக ரூபா 113,075,000 கடன் தொகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தமையால் கடன் செலுத்தல் செயன் முன்னேற்றம் 19 சதவீதம் அளவில் காணப்பட்டது. | தற்போது காணப்படும் கடன் முறைமையின் செயன் முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | கடன் கொடுப்பனவு முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) மீளாய்வாண்டில் இழப்பீட்டுக் கொடுப்பனவிற்காக காசோலைகள் வழங்கப்பட்டிருந்த போதும் இழப்பீட்டாளர்களுக்கு காசோலைகள் வழங்கும் போது காசோலைகள் வழங்கும் சந்தர்ப்பம் வரை நாளது வரையாக்கப்படாத தகவல்களை அடிப்படையாக கொண்டு கோவைகள் பரிந்துரைத்தல் அந்நாளது வரையாக்கப்படாத தகவல்களின் அடிப்படையில் நலனாளிகளுக்கு இழப்பீடு வழங்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டமை காரணமாக அச்செயற்பாடு முறையாக இடம்பெற்றிருக்க வில்லை. மேலும் இழப்பீட்டுத் தொகைக்கு உரித்தாக இழப்பீடு பெறுவோரின் 117 கோவைகள் காணப்பட்டதுடன் பிரதேச செயலாளராலட அடையாளத்தை உறுதிப்படுத்தி 06 ஆண்டுகள் கழிந்த 80 கோவைகள் காணப்பட்டன. | உரிய நலனாலிகளால் தமது வங்கிக் கணக்கினை மூடி விடுதல், கணக்குகள் கூடியளவு காலமாக செயலற்று காணப்படல் மற்றும் வங்கியால் காசோலைகளை தடுத்து வைத்தல் போன்ற காரணங்களால் நலனாலிகளின் காசோலை தேறாமல் காணப்படுகின்றன. | இழப்பீட்டுக் கொடுப்பனவு சரியாகவும் நாளது வரையான தகவல்களை அடிப்படையாக கொண்டு ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் தனது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பதற்கு 2020 பெப்ரவரி 25 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வேண்டுகோள் விடப்பட்டிருந்த போதும் இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |